தஃவதுல் குர்ஆன் வெளியீடு - 1



# அல்குர்ஆனை நோக்கி

குர்ரம் ஜா முராத்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Acc. No :- 057
Class No :-
Date

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAYIQ
Ahatthimurippu

# அல்குர்ஆனை நோக்கி...

محمد فائق بن فريد
الجامعة النظيمية الإسلامية
بيرولا
سريلانكا

குர்ரம் ஜா முராத்

ஹிஸ்புல் இஸ்லாம் டிரஸ்ட்
இஸ்லாமிக் புக் ஹவ்ஸ்
77, தெமட்டகொட ரோட்
கொழும்பு—09
தொலைபேசி : 687091

வெளியீடு:
இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
204/1, தெமட்டகொட வீதி,
கொழும்பு-9.
தொலைபேசி இல. 92760

இப்புத்தக விற்பனையால்
கிடைக்கும் இலாபம்
அறப்பணிகளுக்கே செலவிடப்படும்
இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ASLAM
Ahm Mohamed Ahm

# The Way To The Qur-a,n

TAMIL

First Edition :- May, 1986

Author :
KURRAM MURAD

Translator :
J. M. CASSIM

Publishers :
SRI LANKA JAMA'AT - E - ISLAMI
204 1, Dematagoda Road,
COLOMBO - 9
T'phone :- 9 2 7 6 0

Printers :
I. P. C. Printing Press,
320, N. M. M. Ishak Mawatha,
COLOMBO - 9
T'phone :- 5 9 8 7 7 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

"உங்கள் மத்தியில் இரு பொருட்களை விட்டுச் செல்கின்றேன். நீங்கள் அவ்விரண்டையும் பின்பற்றி நடந்தால் வழி தவறவே மாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் கிதாபும் அவனது தூதரின் ஸுன்னாவுமாகும்" என்று நபி (ஸல்) நவின்றுள்ளார்கள்.

முஸ்லிம்களாகிய எமக்கு அல்குர்ஆனுடனும் அதன் விளக்கமாக அமைந்துள்ள நபி (ஸல்) அவர்களின் ஸுன்னா அல்லது ஹதீஸுடனும் மிகவும் இறுக்கமான தொடர்பிருக்க வேண்டும். நாம் குர்ஆனின் போதனைகளை ஹதீஸ்களின் வழிகாட்டுதலில் புரிந்து நடப்பதிலேயே எமது நேர்வழி அமைந்துள்ளது என்று இந்த ஹதீஸ் எங்களுக்கு உணர்த்துகிறது.

ஆனால் நம்மிடம் இஸ்லாமிய உணர்வு குறைந்து விட்டதாலும் அறபு மொழி அறிவு இல்லாத காரணத்தாலும் குர்ஆனுடனும் ஸுன்னாவுடனும் நேரடியானதும் உணர்ச்சி பூர்வமானதுமான தொடர்பு எமக்கு இல்லாமல் போயிற்று. இதனால் தம்மை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்ளும் பலர் இப்போது இஸ்லாமிய போதனைகளுக்கு மாற்றமான முறையில் வாழ்ந்து வருவதைக் காண முடிகிறது.

அல்லாஹ்வின் பேரருளால் ஈமான் கொண்டு தன்னை முஸ்லிம் என்று கூறிக் கொள்ளும் பாக்கியத்தைப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் இவ்விதம் இஸ்லாத்திலிருந்து தூரச் செல்ல நேர்வது மிகவும் துரதிஷ்டமானது. நேர்வழியின் பின் வழிகேட்டை ஏற்றுக் கொள்வது என்ற இந்த நிலை குர்ஆனைப் பின்பற்ருது விடுவதால் ஏற்படுகிறது என்று அல் குர்ஆனில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"எவன் ரஹ்மானுடைய நல்லுபதேசத்திலிருந்து கண்ணை மூடிக் கொள்கின்ருனே அவனுக்கு நாம் ஒரு ஷைத்தானை சாட்டிவிடுவோம். அவன் அவனுக்கு இணை பிரியாத தோழ ஞகிவிடுவான். மேலும் நிச்சயமாக ஷைத்தான்களாகிய அவை அவர்களை நேர்வழியில் இருந்து தடுத்து விடுகின்றன. எனினும் அல்லாஹ்வின் போதனைகளை மறந்து (ஷைத்தானின் வழிகாட்டுதலில் தவருன வழியில் செல்லும்) இவர்கள் தாம் நேரான வழியில் செல்பவர்கள் என்றே நம்பு வார்கள்" (43: 36, 37)

குர்ஆனை மறக்கும் இவர்களின் நிலை பற்றி, "எவன் என்னுடைய நல்லுபதேசத்தை புறக்கணிக்கிருனே அவனுடைய வாழ்க்கை நிச்சயமாக நெருக்கடியானதாகவே இருக்கும். மறுமை நாளில் நாம் அவனைக் குருடனுக எழுப்புவோம். அப்போது அவன் என் இறைவா ஏன் என்னைக் குருடனுக எழுப்பினுய். நானே பார்வையுடையவனுக இருந்தேனே என்பான். அதற்கு உனக்குரிய தண்டனை இது தான். எமது போதனைகள் உனக்குக் கிடைத்தன. ஆனுல் நீ அவற்றைப் புறக்கணித்து மறந்து வாழ்ந்தாய். அவ் வாறே இன்றைய தினம் நீயும் மறக்கப்பட்டு விட்டாய் என்று அல்லாஹ் சொல்வான்" (20:124-126) என்றும் அல் லாஹ்வே கூறியிருக்கிருன்.

எனவே இன்று தனிப்பட்ட முறையிலும், சமூக மட்டத்திலும் உலக நாடுகள் பலவற்றிலும் சர்வதேச ரீதியாகவும் முஸ்லிம்களாகிய நாம் அனுபவிக்கும் இன்னல்களுக்கும் இடுக்கண்களுக்கும் நிமிடத்துக்கு நிமிடம் நம்மிடையே பெருகி வரும் பிரச்சினைகளுக்கும், நாம் பல வழிகளிலும் அந்நியரின் அடக்கு முறைகளுக்கு ஆளாவதற்கும் அடிப்படைக் கார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம் அல்லாஹ்வின் கிதாபையும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் ஸுன்னாவையும் நாங்கள் புறக்கணித்து விட்டதாகும் என்று தெளிவாகிறது. அதே வேளை நமது இவ் வறிய இழி நிலையிலிருந்து விடுபட வேண்டுமானால் அதற்குரிய ஒரேவழி நாம் அல்குர்ஆனதும் அஸ்ஸுன்னாவினதும் பக்கம் திரும்பி அவற்றைப் பூரணமாக ஏற்று நடப்பதாகும் என்றும் தீர்க்கமாக உணரவும் முடிகிறது.

நாம் இன்றுள்ள பிற்போக்கான நிலையிலும் அல்குர் ஆனையும் நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவையும் மதிக்கிறோம். இது மகிழ்ச்சிக்குரியதே. ஆனால் முற்றிலும் ஜாஹிலிய்யத்தில் வாழ்ந்து நரக விளிம்பிலிருந்த மக்களை ரஸூல் (ஸல்) அவர்கள் அல்குர்ஆனை ஓதிக் காட்டி அவர்களின் வாழ்வாலும் வாக்காலும் அதனை அவர்களுக்கு விளக்கி வைத்து மிக உன்னதமான ஒரு சமூகமாக மாற்றியமைத்தார்கள் என்று அறியும் நாம் அந்த ஸஹாபாக்கள் அணுகிய முறையில் இவற்றை அணுகவில்லை. நாங்கள் விட்ட பிழை இதுவே. இந்த அடிப்படையான பிழையில் இருந்து நாம் விடுபடாதவரை முஸ்லிம்கள் என்ற முறையில் துன்யாவிலும் ஆகிரத்திலும் நாம் உயர்வு பெறமுடியாது.

இக் கருத்து இன்று பரவலாக உணரப்பட்டுள்ளது. உலகில் எல்லாப்பாகங்களிலும் இதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் ஜமாஅதே இஸ்லாமி இயக்கம் அறிமுகமான ஆரம்ப காலம் முதல் குர்ஆனிய தஃவாவை விளக்குவதை அது தனது முதலாவது பணியாக மேற்கொண்டது. எனவே அன்று முதல் இன்று வரை அல்குர்ஆனை அழகாக ஓதி, தெளிவாக விளங்கி, ரஸூல் (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் ஸலபுஸ்ஸாலிஹீன்களும் வாழ்ந்தது போல் வாழ முன்வர வேண்டும்; முழு மனித சமுதாயத்துக்கும் அல்லாஹ்வின் அருட்கொடையான இந்த அருள் மறையின் போதனைகளை விளக்கிவைக்க வேண்டும் என்று பிரசாரம் செய்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இந்நாட்டில் பல ஆயிரக் கணக்கான மக்கள் குர்ஆனை நேர்வழியின் பேருற்று என்ற வகையில் இன்று அணுகிவருவதைப் பார்க்கிறோம்.

நாட்டின் பல பகுதிகளிலும் தப்ஸீர் வகுப்புக்களும் குர்ஆன் பற்றிய உரையாடல்கள், பயான்கள் முதலியனவும் நடத்தப்படுகின்றன. அல்குர்ஆனின் போதனைகளை விளக்கி தமிழிலும் சிங்களத்திலும் பல நூல்களை எமது இயக்கம் வெளியிட்டு வருகின்றது. இயக்க வெளியீடுகளான அல் ஹஸனாத்திலும், சிங்கள மொழி 'பிரபோதய' விலும் அல்குர் ஆன் விளக்கங்களையும் குர்ஆனிய கருத்துக்களை விளக்கும் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகிறோம்.

அல்குர்ஆனில் மக்கள் அதிக அக்கறை கொள்ளச் செய்யும் எமது இப்பணியை மேலும் விருத்தி செய்யும் நோக்கமாக இவ்வாண்டு முதல் ரமழான் மாதத்தை அல் குர்ஆன் மாதமாக அனுஷ்டிப்பதற்கு நாடளாவிய முறை யில் முயற்சிகளை மேற்கொள்வது என்றும் தீர்மானித் தோம். இப்பணியைத் திறம்பட தொடர்ந்தும் நடத்து வதற்காக தஃவதுல் குர்ஆன் விருத்திப் பகுதி என்று ஜமாஅத்தில் தனியானதொரு பகுதி அமைக்கப்பட் டுள்ளது. இதற்கென்று தனியானதொரு நிதியமும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மேற்கொள்ள வேண் டிய முயற்சிகளைத் தீர்மானிப்பதற்கு உதவியாக இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் அல்குர்ஆனின் செல்வாக்கை மதிப் பீடு செய்வதற்கான ஒரு முயற்சியையும் முதன்முறையாக மேற்கொண்டிருக்கிறோம்.

தஃவதுல் குர்ஆன் விருத்திக்காக ஜமாஅத் மேற்கொள் ளும் பணிகளுள் மற்றொன்றாக இந்தச் சிறிய நூல் இப் போது உங்கள் கரங்களுக்கு எட்டியுள்ளது.

இது மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்களின் இஸ்லாமிய தஃவாவினால் கவரப்பட்டு, குர்ஆனை ஆழமாகக்கற்று, அதனை உறுதியாகப் பின்பற்றி நடந்து அழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக விளக்கும் திறமை பெற்ற யடித்த வட்டத்தைச் சேர்ந்த பொறியியலாளரான சகோ. குர்ரம் ஜா முராத் என்பவரால் எழுதப்பட்டது.

இவர் இங்கிலாந்து, லெஸ்டரில் உள்ள இஸ்லாமிய நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளராகக் கடமை புரிந்து வருகிறார். அல்லாமா யூசுப் அலியின் அல்குர்ஆன் ஆங்கில மொழி பெயர்ப்பின் முன்னுரையில் அல்குர்ஆனை அணுகும் முறை பற்றிய மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களின் முன்னுரையைத் தொடர்ந்து இது பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

சகோதரர் குர்ராம் ஜா முராத் அவர்களை நேரில் கண்டவர்களும் அவரின் குர்ஆன் விளக்கப் பேச்சுக்களை கேட்டவர்களும் அவரது குர்ஆனிய மோகத்தை நன்கு அறிவர். பொறியியலாளராகப் பணிபுரிய வேண்டிய அவர் இன்று இஸ்லாமிய நிறுவனத்தின் பணிப்பாளராகவிருந்து இஸ்லாமிய நூல்களை எழுதியும் பெறுமதிமிக்க நூல்களைப் பெற்று வெளியிட்டும் மகத்தான சேவை செய்து வருகிறார்.

இங்ஙனம் குர்ஆனால் கவரப்பட்ட ஒரு பொது மகன் அதன் மகிமை பற்றிக் கூறியுள்ள கருத்துக்களைப் படிக்கும் அனைவரது உள்ளத்திலும் அல்குர்ஆனை உரிய முறையில் அணுகி, அனைத்து விதமான வழிகேடுகளில் இருந்தும் விடுபட்டு, ஈருலக சுபீட்சத்துக்கு வழி காட்டும் ஒரு புத்துலகுக்குள் நுழைய வேண்டும் என்ற ஆவல் பிறக்கும். இவ்விதம் விரும்பும் அனைருக்கும் இந்நூல் ஒரு வழிகாட்டியாக விளங்கும் என்று திடமாக நம்புகிறோம்.

இந்நூலை மிகவும் குறுகிய காலத்தில் அழகுற மொழி பெயர்த்து உதவிய முஸ்லிம் சமய, கலாசார விவகாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சகோதரர் ஜே. எம். காஸிம் அவர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எமது இயக்கத்தின் தஃவதுல் குர்ஆன் விருத்திப்பகுதியால் வெளியிடப்படும் இந்த முதலாவது பிரசுரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமனதுடன் நீங்கள் வாங்கி வாசித்து, பயனடைவதோடு தொடர்ந்தும் நாம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ள குர்ஆனிய பணிகள் அனைத்திற்கும் உங்களது பேராதரவையும் ஒத்துழைப்பையும் தர வேண்டும் என்று அன்போடு வேண்டுகிறோம்.

யா அல்லாஹ் அல்குர்ஆனை எமக்கு வழிகாட்டியாகவும் ஒளிவிளக்காகவும் நேர்வழியாகவும் கருணையாகவும் ஆக்குவாயாக. அதனை உரிய முறையில் இரவும் பகலும் ஓதி அதன் வழி நடந்து உனது "ரிழா"வைப் பெற எமக்கு அருள்புரிவாயாக! ஆமீன்.

மௌலவி. ஏ. எல். எம். இப்ராஹீம் எம். ஏ.
அமீர்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி,
கொழும்பு 9
10 ரமழான் 1406
19 மே 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆனை நோக்கி ....

## 1. ஒரு புத்துலகம் உங்களுக்காகக் காத்திருக்கிறது

அல்குர்ஆனை ஓதத் தொடங்கும் நீங்கள் மிக முக்கியமான ஒரு பயணத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றீர்கள். இப்பயணம் உங்களைப் படைத்து இரட்சித்த அல்லாஹ் உங்களுக்கும் அனைத்து மனிதகுலத்துக்கும் அருளிய திருவசனங்களின் முடிவில்லாத மகிழ்ச்சிக்கும் பாக்கியங்களுக்குமூடாக உங்களை வழிநடத்திச் செல்லும். திருக்குர்ஆனில் நுழையும் நீங்கள் ஒரு புதிய உலகில் பிரவேசிக்கின்றீர்கள். அவ்வுலகமானது வார்த்தைகளில் அடங்காத அறிவுப் பொக்கிஷங்களையும் மதிநுட்பங்களையும் உள்ளடக்கியது. அது உங்கள் வாழ்வுக்கு வழிகாட்டும் சிந்தனையையும் நடத்தையையும் வழிநடாத்தும். உங்கள் கற்பனைகளை வசீகரிக்கக்கூடிய ஆழமான ஆராய்ச்சிகளைத் தூண்டிவிடும். உங்கள் ஆத்மாவின் அடித்தளத்தையே ஒளிமயமாக்கவல்ல ஒளிப்பிரவாகங்களைக் கொண்டிருக்கும். உங்கள் நெஞ்சத்தை நெக்குருகச் செய்து கன்னங்கள் வழியாகக் கண்ணீரைப் பெருக்கெடுத்தோடச் செய்யக்கூடிய ஆணித்தரமான உணர்ச்சிகளின் ஒளிச்சுடர்களைக் கொண்டிருக்கும். இம்மையிலும் மறுமையிலும் உங்களுக்கு வழிகாட்டியாக இருந்து வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் மகிமையையும் தேடித்தரக்கூடியது புனித திருக்குர்ஆன் மட்டுமேயாகும்.

திருக்குர்ஆன் மனிதகுலத்துக்காகத் தன்னுள் அடக்கி வைத்திருப்பவற்றின் மகத்துவங்களையும் மகிமைகளையும் விளங்கிக் கொள்வதும் விபரிப்பதும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். எனினும் அது உங்களிடம் எதிர்பார்ப்பவை பற்றி ஓரளவாவது அறிந்திருத்தல் அவசியம். இன்றேல், நீங்கள் திருக்குர்ஆனில் முழுமையாகத் திளைக்க ஆர்வம் ஏற்படமாட்டாது. திருக்குர்ஆன் எதிர்பார்ப்பது போன்ற முழுமையான அர்ப்பணிப்பையும் பரிபூரண ஈடுபாட்டையும் உங்களால் நிறைவேற்றமுடியாது. அல்லாஹ் உங்களுக்காக அருளியவற்றுள் மிகப்பெரிய அருட்கொடை திருக்குர்ஆனாகும். என்னிடமிருந்து நிச்சயமாக உங்களுக்கு நேர்வழி வரும். எவர்கள் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் 2:38) என்று ஆதமுக்கும் (அலை) அவரது சந்ததியினர்க்கும் அல்லாஹ் அளித்த வாக்குறுதியைத் திருக்குர்ஆனை அருளிய தன் மூலம் நிறைவேற்றியுள்ளான். நீங்கள் இவ்வுலகில் பாவங்களையும் இச்சைகளையும் எதிர்த்துப் போராடிக் கொண்டு நடாத்தும் பலவீனமான வாழ்க்கையில் திருக்குர்ஆன் மாத்திரமே உங்களுக்குத் துணையாக நிற்கக்கூடிய போராயுதமாகும். நீங்கள் வெற்றியையும் ஈடேற்றத்தையும் அடையும் வழிதேடி அந்தகாரத்திற் தத்தளிக்கும் வேளையில் திருக்குர்ஆன் மாத்திரமே உங்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகும். கொந்தளிக்கும் வாழ்க்கைச் சமுத்திரத்தில் நீங்கள் தத்தளிக்கும் வேளையில் அது ஒன்றே உங்களுக்குப் புகலிடமாக அமையும். விண்ணுலகிலேயே வலிமை மிக்கவரும் நம்பிக்கைக்குரியவருமான வானவர் ஜிப்ரீல் மூலமாகவே அது பூவுலகிற்கு இறக்கப்பட்டது. அது மூதல் முதலாக அருளப்பட்ட இதயமோ மனித வரலாற்றில் உவமை காணமுடியாதளவுக்குத் தூய்மையும் பரிசுத்தமும் கொண்ட உத்தமத் தூதர் முஹம்மத் (ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இதயமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக எமது சிருஷ்டிகர்த்தாவை அணுகவும் நெருங்கவும் திருக்குர்ஆனைத் தவிர வேறு 'வழி' இல்லை. அல்லாஹ்வைப் பற்றியும், அவனது (ஸிபாத்) பண்புகள் பற்றியும், அவன் பிரபஞ்சத்தையும் வரலாற்றையும் எவ்வாறு ஆட்சிபுரிகின்றான் என்பது பற்றியும் நீங்கள், அவனோடும், உங்களோடும் உங்கள் உறவினர்களோடும் ஏனைய சிருஷ்டிகள் யாவற்றுடனும் எவ்வாறு உறவாட வேண்டும் என்பது பற்றியும் புனித திருக்குர்ஆன் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

நீங்கல் திருமறையில் ஓதும் வசனங்கள், மனிதர்களின் மொழிநடையில், பிரபஞ்சங்களின் அதிபதியாகிய அல்லாஹ் அருளிய அவனுடைய திருவசனங்களே. அவன் மனித குலத்தின் மீது கொண்ட மாபெருங் கருணை, காருண்யம், அக்கறை என்பனவற்றின் காரணமாகவே அதனை அருளியுள்ளான். தெய்வீகக் காருண்யம் மிக்க இந்தச் செய்கையானது உங்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடவல்லது; வசீகரித்து ஆட்கொள்ளவல்லது; நன்றியுணர்வின் உச்சக்கட்டங்களுக்கே உங்களை இட்டுச் செல்லவல்லது; 'திருக்குர்ஆனின் உலகில்' பிரவேசிக்க உங்களிற் பேரார்வத்தையும் உற்சாகத்தையும் தூண்டப் போதுமானது. புனித திருக் குர்ஆனின் மகத்துவம் எவ்வளவு வலிமையுடையதெனில் ''யாதொரு மலையின் மீதும் நாம் இந்தக் குர்ஆனை இறக்கி வைத்தால் அது அல்லாஹ்வின் பயத்தால் நடுங்கி வெடித்துப் பிளந்து போவதை நிச்சயமாக நீர் கண்டிருப்பீர்'' (59:21) என அல்லாஹ் கூறியுள்ளான். நிச்சயமாகத் திருக்குர்ஆனை விட மதிப்பும் மகத்துவமும் கொண்ட பிறிதொரு பொக்கிஷமில்லை. இதனை பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் ''மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக உங்களுக்கு ஒரு நல்லுபதேசமும் (உங்கள்) இதயங்களிலுள்ள நோய்களுக்கு ஒரு சிரஞ்சீவியும் மேலும் விசுவாசங்கொண்டவர்களுக்கு ஒரு நேர்வழிகாட்டியும் ஓர் அருளும் வந்திருக்கிறது (இந்த) அல்லாஹ்வின் அருளையும் அவனுடைய கருணையையும் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சந்தோஷமடையட்டும்; இது அவர்கள் சேகரித்து வைத்திருக்கும் (மற்றப் பொருள்கள்) யாவையும் விட மிக்க மேலானது.'' என்று (நபியே) நீர் கூறுவீராக" (10: 57, 58)

அல்லாஹ்வின் காருண்யம், அருள்மாரி, தாராளம் என்பனவற்றையிட்டு நீங்கள் குதூகலமடைய வேண்டும். ஆனால், திருக்குர் ஆனின் முக்கியத்துவத்துக்கும் மகிமைக்கும் ஏற்றவாறு பரிசுத்த உள்ளத்தோடும், அதற்கேயுரிய மன ஒருமைப்பாட்டுடனும் ஆழ்ந்த பற்றுதலுடனும் அதனை அணுகுவோர்க்கு மட்டுமே அது அதன் வாசல்களை அகலத் திறக்கும். அதன் வழிகாட்டுதலுக்கு முழுமையாகக் கீழ்படிந்தவர்களுக்கும் அதனைப் புரிந்துகொள்ளத் தம்மாலான சகலவற்றையும் செய்யத் துணிந்தவர்களுக்கும் மாத்திரமே அதனூடாகச் செல்கையில் அதன் அளப்பரிய பொக்கிஷங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் வரப்பிரசாதம் கிட்டும். திருக்குர் ஆனில் பிரவேசிக்கும் நீங்கள் - அது உங்கள் ஆத்மாவைத் தீண்டாமலும், இதயத்தை அசைக்காமலும், வாழ்க்கையை மாற்றியமைக்காமலும் - வெறுங் கையோடு வெளியேற நேரிடுமாயின் அதைவிடக் கொடூரமான துரதிருஷ்டம் (வேறு) என்ன இருக்கமுடியும்? நீங்கள் மிகுந்த சிரமத்தோடு அதன் திருவசனங்களை முடிவில்லாமல் ஓதிக்கொண்டும் அதன் பக்கங்களைப் புரட்டிக் கொண்டும் இருந்த போதிலும் அது உங்களுடைய பூரண மனிதத்துவத்தில் ஒருவித மாற்றத்தையும் ஏற்படுத்தாதிருக்கலாம்; அல்லது அதனை வனம்படுத்தக்கூடிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாமலும் இருக்கலாம். புனித திருக்குர் ஆனின் அருட்கொடைகளோ அளப்பரியவை. எனினும் அதிலிருந்து நீங்கள் அள்ளிக்கொள்ளக்கூடிய அளவானது உங்கள் பாத்திரத்தின் விசாலத்திலும் உங்கள் ஆற்றலிலுமே முற்றிலும் தங்கியுள்ளது. தாயின் கருவறைக்குள் ஒன்பது மாதங்களைக் கழித்த பின்னர் ஒரு துளித் திரவம் (பார்த்தல், கேட்டல், சிந்தித்தல் முதலிய ஆற்றல்களைப் பெற்ற) 'மனித ஜீவனாக' மாற்றமடைகிறது. அப்படியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின், வாழ்நாளெல்லாம் புனிதத் திருக்குர்ஆனை இறைஞ்சி கேட்டு, பார்த்து, சிந்தித்து, மன்றாடி ஓதிவருவீர்களாயின் அது உங்களை எவ்வாறாக மாற்றியமைக்குமென்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமல்லவா? அது மலக்குகளும் பெருமையுடன் அடிபணியத்தக்க ஒரு முற்றிலும் புதுமையான 'ஜீவி' யாக உங்களை மாற்றியமைக்கும். எனவே திருக்குர்ஆனின் எதிர்ப்பார்ப்புகளையும் இலட்சியங்களையும் ஆரம்பத்திலேயே ஆழமாகப் புரிந்து கொண்டு அதனை உரிய முறையில் ஓதுவதற்கான பரிசுத்தமான திடசங்கற்பத்தை ஏற்படுத்திக் கொள்வீர்களாக! நீங்கள் அவ்வாறு செய்வதனால் "நாம் எவர்களுக்கு வேதத்தை கொடுத்தோமோ அவர்கள் அதை ஓதவேண்டிய முறைப்படி ஓதுகிறார்கள். அவர்களே அதனை விசுவாசிக்கின்றனர்." (2: 121) என அல்லாஹு தஆலாவினால் வர்ணிக்கப்பட்டவர்களின் வரிசையில் நீங்களும் கணிக்கப்படுவீர்கள்.

'திலாவத்' எனப்படும் திருக்குர்ஆன் ஓதுதலின்போது ஆத்மா, உள்ளம், சிந்தனை, நாவு, உடல் ஆகிய அனைத்தும் அடங்கிய முழுமையான புருடத்துவமும் அதில் பங்கு பற்ற வேண்டும். அவ்வாறாகத் திருக்குர்ஆனை உரிய முறையில் ஓதுவது ஒரு இலகுவான காரியமுமல்ல; அன்றி உங்களாற் செய்ய முடியாத ஒரு கடினமான அல்லது சாத்தியமற்ற காரியமுமல்ல. அப்படியில்லாவிட்டால் அது உங்களைப் போன்ற சாதாரண மனிதர்களுக்காக அருளப்பட்டிருக்க மாட்டாது; அது அதன் இயல்பான காருண்யமாகவும் வழிகாட்டியாகவும் இருக்காது. ஆனால் திருக்குர்ஆனை ஓதுவதற்கு உள்ளமும் சிந்தனையும், ஜீவனும் மதிநுட்பமும், ஆத்மாவும் உடலும் கடினமாக உழைப்பது இன்றியமையாததாகும். மேலும் அதனை ஓதும்போது சில நிபந்தனைகளையும் விதிகளையும் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அவற்றுற் சில. அந்தரங்கமானவை, மற்றும் சில வெளிப்படையானவை. எனவே தற்போது மகத்துவம் மிக்க திருக்குர்ஆனின் உலகில், நுழையத் தயாராகவிருக்கும் நீங்கள் அவற்றை முற்றாக அறிந்திருத்தல் அவசியம். இனி அவற்றைக் கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II அடிப்படையான முன் நிபந்தனைகள்

திருக்குர்ஆனைப் பயனுள்ள முறையில் ஓதுவதற்கு அத்தியாவசியமான முன் நிபந்தனைகளை வகுக்கும் உளரீதியானதும் சிந்தனை ரீதியானதுமான சில அடிப்படை மனப்பாங்குகள் உண்டு. அவை அந்தரங்க ஆத்மாவிலும் செயலிலும் இரண்டறக் கலத்தல் வேண்டும்.

1. 'இது அல்லாஹ்வின் திருவசனம்' என்ற ஆழ்ந்த விசுவாசத்துடனும் திடசித்தத்துடனும் திருக்குர்ஆனில் நுழைய வேண்டும். ஒரு மனிதன் திருக்குர்ஆனை ஒரு சாதாரண புத்தகத்தைப் போல கையிலெடுத்து வாசிக்கத் தொடங்கினாலுங் கூட அது அவனுக்குப் பயனளிக்கக்கூடிய வசீகரத்தன்மை கொண்டது. அவன் அதனைத் திறந்த மனத்துடன் ஓதினால் மட்டுமே அத்தகைய பலன் கிட்டும். ஆனால், இது அல்லாஹ்வின் திருவசனம்; எனவே நீங்கள் வாசிக்கும் ஒவ்வொரு சொல்லும் அல்லாஹுத்தஆலாவினால் உங்களுக்கென்றே அருளப்பட்டதென்ற உணர்வானது உங்களில் நிலைபெறுதல் அவசியம். இத்தகைய எண்ணத்தைத் தொடர்ச்சியாகப் பேணிக்கொள்வது; நீங்கள் திருக்குர்ஆனின் அகத்தை அடையவும் அதன் தூதைப் புரிந்துகொள்ளவும் தேவையான சரியான மனப்பாங்குகளையும் வலுவான திடசங்கற்பத்தையும் விருத்தி செய்து கொள்வது அத்தியாவசியமாகும். அல்லாஹுத்தஆலாவின் மேன்மையையும் மாட்சிமையையும், அதிகாரத்தையும் எண்ணினால் அவனது திருவசனங்கள் மீது பக்தியும் கீழ்ப்படிவும் ஏற்படுவதை நீங்கள் உணரமுடியும். அதற்காகவே திருக்குர்ஆனின் ஒவ்வொரு சூராவின் ஆரம்பத்திலும் இடைக்கிடையேயும் இந்த முக்கியமான உண்மை அடிக்கடி நினைவூட்டப்படுகிறது.

2. உங்கள் இறைவனை நெருங்கி அவனுடைய வழிகாட்டுதலையும் திருப்தியையும் பெறுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு நீங்கள் புனித குர்ஆனை ஓத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்தே உங்கள் முழு வாழ்க்கைக்கும் வழி காட்டுதலைப் பெறவேண்டும். அதாவது அத்தகைய வழி காட்டல் தர வல்லது திருக்குர்ஆன் ஒன்று மட்டுமே. அது அல்லாஹ்வின் திருவசனங்களைக் கொண்டது. எனவே அது அவனுக்கேயுரிய தனிச் சிறப்பையும் கொண்டது. திருக்குர்ஆனிலிருந்து உலகாயத நலங்களை மட்டும் எதிர்பார்ப்பவர்களுக்கும் அவை கிடைக்கலாம். ஆனால் அவ்வாறு செய்வதனால் ஒருவன் தனது பாத்திரத்தை நிரப்பக்கூடிய ஒரு மாபெரும் சமுத்திரத்தையே இழந்துவிடுகின்றான். திருக்குர்ஆனைக் கையிலேந்திகொண்டு வழிகாட்டுதலுக்காகப் பிறவழிகளை நாடுபவன் நிச்சயமாகக் கானலை நீர் என்றெண்ணி அலைபவனாகிறான்.

3. குர்ஆன் உங்களுக்கு வழங்கும் ஒவ்வொரு துளி உண்மையையும் அறிவையும் நல்லுபதேசத்தையும் கடுகளவு சந்தேகமோ தயக்கமோ இன்றி ஏற்றுக்கொள்ளுங்கள். அதிலுள்ளவற்றை ஆராயவும் சீர்தூக்கிப் பார்க்கவும் விளக்கம் கோரவும் உங்களுக்குப் பரிபூரண உரிமையுண்டு. ஆனால் உங்களால் விளங்கிக்கொள்ள முடியாத அனைத்தையும் ஆதாரமற்றவையாகக் கருத முடியாது. அல்லாஹ்வின் திரு வசனங்கள் தவிர்ந்த ஏனையவற்றை நிராகரிக்க உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் அல்குர்ஆன் அல்லாஹ்வினுடையதென ஏற்றுக்கொண்டபின் அதன் ஒரு சொல்லையேனும் நிராகரிக்க உங்களுக்கு எத்தகைய உரிமையுமில்லை. நீங்கள் குர்ஆனுக்கு முற்று முழுமையாக அடிபணிந்து சரணடைய வேண்டும். அதன் எந்தப் பகுதியையாவது உங்கள் சொந்த அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள், சார்புகள், கருத்துக்கள், சபலங்கள் என்பன மீறிச் செல்ல நீங்கள் இடமளிக்கக்கூடாது.

4 திருக்குர்ஆனில் நீங்கள் சந்திக்கும் நல்லுபதேசங்களுக்கேற்ப -அகத்திலும் புறத்திலும்- உங்கள் மனப்பாங்குகளையும் நடத்தைகளையும் மாற்றியமைத்துக் கொள்ளத் தயாராகக்கூடிய திடசங்கற்பத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் தயார் நிலையிலும் செயலாற்றும் துணிச்சலோடும் இல்லாவிட்டால், வெறுமனே அறிவுச் சர்ச்சை புரிவதால் மட்டும் திருக்ஆனின் உண்மையான பொக்கிஷங்களை நீங்கள் நெருங்கவே முடியாது.

5. நீங்கள் திருக்குர்ஆனைக் கற்க ஆரம்பித்ததும் உங்கள் முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்களும் வளங்களும் அதிகரித்துவிடும். அப்போது உங்கள் முயற்சிகளின் பலனை நீங்கள் அனுபவிக்க விடாமல் தடுப்பதற்காக சைத்தான் பாரிய முயற்சிகளை மேற்கொள்ளக் கூடுமென்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அவன் உங்கள் குறிக்கோளை மாசுபடுத்துவான்; அதன் கருத்தையும் நல்லுபதேசத்தையும் அலட்சியப்படுத்தத் தூண்டுவான்; உங்கள் உள்ளத்திற் சந்தேகங்களைத் தோற்றுவிப்பான்; உங்கள் ஆத்மாவுக்கும் அல்லாஹ்வின் திருவசனங்களுக்கும் இடையே பாரிய தடைகளைப் போடுவான்; அல்லது திருக்குர்ஆனை பின்பற்றுவதிலிருந்து உங்களைத் திசைதிருப்பி விடுவான். இத்தகைய பேராபத்துக்களையும் அனர்த்தங்களையும் நன்குணர்ந்தவர்களாக நீங்கள் குர்ஆனில் "(நபியே!) நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால் (அதற்கு முன்னதாக) வெருட்டப்பட்ட சைத்தானை விட்டுக் காக்கும்படி அல்லாஹ்விடம் கோரிக் கொள்ளும்" (16 : 98) எனக் கூறியுள்ளவாறு 'அஊது பில்லாஹி மினஷ்ஷெய்தானிர்ரஜீம்' என்று கூறிக்கொள்ளுங்கள்.

6. அல்லாஹுத் தஆலாவின் எல்லையற்ற கருணையின் காரணமாகவே திருக்குர்ஆனின் வசனங்கள் உங்களுக்கு அருளப்பட்டிருப்பதைப் போலவே அவற்றை ஓதுவதன் மூலம் பரிபூரணமான பயன் கிட்டுவதும் அவனுடைய காருண்யத்திலேயே தங்கியிருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் அவாவும் முயற்சியுமே இன்றியமையாத வழிகளாகும். ஆனால் அவனது பொருத்தமும் ஆதரவும் மட்டுமே அதற்கான உத்தரவாதங்களாகும். எனவே மிக்க பக்தியோடு குர்ஆனை அணுகுங்கள். அல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் மீதே நம்பிக்கையும் விசுவாசமும் வையுங்கள். ஒவ்வொரு நிலையிலும் அவனிடமே கையேந்தி பக்தி செலுத்துங்கள்.

7. அவனுடைய ஒப்பற்ற வெகுமதியாகிய குர்ஆனை அருளியமைக்காகவும், அதனை ஓதி உணரக்கூடிய வழிகாட்டுதலைத் தந்தமைக்காகவும் உங்கள் இரட்சகனுக்கு நன்றி பாராட்டி மிகையான நல்லாசிகளைக் கூறுங்கள். இவை உங்கள் நெஞ்சங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கட்டும். அப்போது உங்கள் நெஞ்சம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து "நேரான வழியில் எங்களைச் செலுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும். அல்லாஹ் எங்களை நேர்வழியிற் செலுத்தியிருக்காவிடில் நிச்சயமாக நாங்கள் நேர்வழியை அடைந்திருக்கவே மாட்டோம்" (7: 43) என முணுமுணுத்த வண்ணமிருக்கும். நீங்கள் எவ்வளவுக்கு நன்றியுணர்ச்சி உள்ளவர்களாக இருக்கின்றீர்களோ அவ்வளவுக்கு அல்லாஹ் உங்களுக்குத் திருக்குர்ஆனின் செல்வங்களை வாரி வழங்குவான்.

எனவே, நம்பிக்கை, விசுவாசம், நல்லாசி, நன்றியுணர்வு என்பவற்றுடன் உள்ளமும் உதடுகளும் ஒருமித்த நிலையில் திருக்குர்ஆனை ஓத ஆரம்பிப்போமாக! "எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேரான வழியை அறிவித்ததன் பின்னர், எங்களுடைய இருதயங்கள் (அதிலிருந்து) தவறிவிடுமாறு செய்யாதே! உன் அன்பான அருளையும் உன் புறத்திலிருந்து எங்களுக்கு அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெருங் கொடையாளி!" (3; 8)

## III அந்தரங்க சுத்தி

திருக்குர்ஆனை ஓத ஆரம்பிக்க முன்பதாக உங்கள் 'இதயம்' உங்களுடனேயே இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். அது வெறுமனே ஒரு சதைக்கட்டியாகவன்றி, உங்கள் கவனம், நினைவு, உணர்வுகள், ஆவல்கள், செயற்பாடுகள் ஆகிய அனைத்திற்கும் மையமாகத் திகழ வேண்டும். அதாவது உங்கள் பரிபூரண அக உருவமாக அவ்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயம் மிளிர வேண்டும். அவ்வாறிருந்தால் மட்டுமே அல்லாஹ்வின் ஒப்பற்ற வெகுமதிகளைப் பெறும் ஆற்றல் உங்களுக்கு வரும். அத்தோடு அவனுக்குக் கீழ்படிந்து பக்தி செலுத்தலாம். முன்னர் விபரித்த ஏழு நியந்தனைகளும் திருக்குர்ஆன் உங்கள் உள்ளத்தோடு சங்கமிக்கத் தேவையான அடித்தளத்தை அமைக்கின்றன. மேலதிகமாகப் பின்வரும் விதிகளையும் பின்பற்றுவதன் மூலம் உங்கள் அந்தரங்க சுத்தியின் வலிமையையும் தரத்தையும் பெருமளவுக்கு அதிகரிக்கலாம்.

1. நீங்கள் திருக்குர்ஆனை ஓதும்போது அத்திருவசனங்களை உங்களுக்கு அருளிய அல்லாஹ்வின் சந்நிதானத்திலேயே நீங்கள் இருப்பதாக எப்பொழுதும் உங்கள் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். "நீங்கள் எங்கிருந்தபோதிலும் அவன் உங்களுடன் இருக்கிறான்" (57: 4) "பிடரியிலுள்ள உயிர் நரம்பைவிட நாம் அவனுக்கு மிகச் சமீபமாகவே இருக்கிறோம்" (50: 16) "நீங்கள் எந்த நிலைமையிலிருந்த போதிலும் குர்ஆனிலிருந்து நீங்கள் எ(ந்த வசனத்)தை ஓதிய போதிலும் நீங்கள் எந்த வேலையைச் செய்த போதிலும் நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போதே நான் உங்களை கவனிக்காமல் இருப்பதில்லை" (10: 61) "நீங்கள் என்னை நினையுங்கள். நானும் உங்களை நினைத்து (அருள் புரிந்து) வருவேன்" (2; 152) நீங்கள் அவனைக் காணமாட்டீர்கள். ஆனால் நிச்சயமாக அவன் உங்களை நோட்டமிடுகிறான்.

2. நீங்கள் உங்கள் முயற்சியின் ஓரம்சமாக அல்லாஹ்வின் சந்நிதானத்தில் 'தரித்திருப்பதாக' உணர்ந்து திருக்குர்ஆனை அல்லாஹ்விடத்திலிருந்தே செவிமடுப்பதாக உணருங்கள். இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்களின் இஹ்யாவில் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த மனிதர் குர்ஆனை முதன் முதலாக முஹம்மத் (ஸல்) அவர்களிடத்திலிருந்தும், இரண்டாவதாக அமரர் ஜிப்ரீல் (அலை) அவர்களிடத்திலிருந்தும் இறுதியாக அல்லாஹுதஆலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்திலிருந்தேயும் செவியுறுவதாகக் கற்பனை செய்து ஓது வதன் மூலம் திருக்குர்ஆனை மிக மிக நெருங்கவும் அதன் இனிமையைக் கூடுதலாகச் சுவைக்கவும் முடிந்ததாம்.

3. திருக்குர்ஆன் தனிப்பட்ட முறையில் உங்களை விழித் தும் நேரடியாக உங்களுக்கும் அருளப்பட்டதாக நினையுங் கள். திருக்குர்ஆன் மனிதர்கள், காலங்கள், இடைவெளிகள் என்பவற்றுக்கூடாக மறைமுகமாக உங்களுக்குக் கிடைத்த தாயினும் சில கணங்களுக்கு அந்த இடைக்காரணிகள் அனைத்தும் மங்கி மறையட்டும். திருக்குர்ஆனை உங்களு டைய இதயத்தையும் நுண்ணறிவையும் ஊடுருவிக்கொண்டு உங்களோடு நேரடியாகவே உரையாட அனுமதியுங்கள். அத்தகைய நேரடித் தொடர்பு பற்றிய சிந்தனையே நீங் கள் ஓதுகின்ற குர்ஆனில் உங்கள் இதயம் லயித்துவிட வழிகோலும்.

4. உங்கள் இறைவனின் திருவசனங்கள் மீது இதயத்தில் உருவாகும் பக்தி, மரியாதை, கீழ்படிதல் அர்ப்பணம் ஆகிய பண்புகளை உங்கள் வெளித்தோற்றத்திலும் பிரதிப லிக்கச் செய்யுங்கள். ஒரு மனிதனின் அகத்துக்கும் புறத் துக்குமிடையே ஆழமான தொடர்பு காணப்படுகிறது. உட லின் புனிதம் உள்ளத்தின் புனிதத்துவத்தை எடுத்துக் காட்டவல்லது. ஒரு சாதாரண நூலை வாசிக்கும்போது உங்கள் உடல் தோற்றம் இருப்பதிலும் பார்க்க திருக்குர் ஆனை வாசிக்கும் போது உங்கள் உடல் தோற்றம் மாறு பட்டதாக இருக்க வேண்டும்.

5. இயன்றளவுக்கு உங்களைத் தூய்மைப்படுத்திக் கொள் ளுங்கள். திருக்குர்ஆனைத் தொடுவதற்குக்கூடத் தூய்மை யானவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பதை நீங் கள் அறிவீர்கள்; உங்கள் உடலும் உடையும் சூழலும் சுத்தமாக இருத்தல் அவசியம் என்பதை அறிவீர்கள்; உங்கள் எண்ணங்கள் பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்ப தையும் அறிவீர்கள். எனினும் உங்கள் உள்ளமும் உடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவச் செயல்களிலிருந்து பரிசுத்தமடைய வேண்டுமென்ப தையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். பாவங்களிலிருந்து முற்றிலும் விடுதலையானவர்கள் இருத்தல் அரிது. எனினும் இயலுமளவுக்குப் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண் டும். நீங்கள் பாவச் செயல்களைப் புரிய நேரிட்டால் அல் லாஹ்வின் பக்கம் திரும்பிப் பச்சாத்தாபப்பட்டுப் பாவ மன் னிப்புக் கோருவதில் அவசரப்படுங்கள். மேலும் நீங்கள் திருக்குர்ஆனை ஓதும்போது ஹறாத்தை உண்பதையும், ஹ றாத்தை அணிவதையும், ஹறாத்தில் வாழ்வதையும் (அல் லாஹ்வினால் அனுமதிக்கப்படாதவற்றை) தவிர்த்துக் கொள் ளுங்கள். நீங்கள் எவ்வளவுக்குப் பரிசுத்தமானவர்களாக இருக்கின்றீர்களோ அவ்வளவுக்கு உங்கள் உள்ளம் உங்க ளோடிருக்கும். அத்துடன் அது திருக்குர்ஆனின் பக்கம் திறந்திருக்கும்.

## IV விளக்கமும் ஒழுக்கமும்

அல்லாஹ் உங்களுக்குக் கூறியுள்ளவற்றை விளங்கிக் கொள்வதும் அவற்றுக்கேற்ப ஒழுகுவதும் மிக முக்கியமா னவை. திருக்குர்ஆனை ஓதுவதில் இருக்கும் அவாவின் கார ணமாகவும் பக்தியின் காரணமாகவும் அதனை விளங்காமல் ஓதுபவர்களுக்கும் சில வெகுமதிகள் கிடைக்கக் கூடும். ஆனால் அவ்வாறு ஓதுவதன் மூலம் அது அருளப்பட்டதன் நோக்கம் ஒருபோதும் நிறைவேற மாட்டாது. அது உங்களுக்குப் புத்து யிரூட்டிப் புது வாழ்வு வாழ்வதற்குத் தயார் படுத்துவதற்கெ ன்றே அருளப்பட்டதாகும். அது வெறுமனே ஒரு கருணையின் ஊற்றுக் கண்ணாகவோ, தெய்வீக சம்பிரதாயமாகவோ, புனிதச் சின்னமாகவோ, தெய்வீக வித்தையாகவோ அரு ளப்படவில்லை. திருக்குர்ஆன் அநேக இடங்களில் "கேட்க வில்லையா?" "பார்க்கவில்லையா?" "சிந்திக்கவில்லையா?" "விவாதிக்கவில்லையா?" "ஆராயவில்லையா?" என உங் களைப் பார்த்துக் கேள்வியெழுப்புகின்றது. மேலும் அவர்கள் "குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா. இது அல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாதவரிடமிருந்து அருளப்பட்டிருந்தால் இதில் அனேக முரண்பாடுகளை அவர்கள் காண்பார்கள் (4: 82) என்றும் "அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது (அவர்களுடைய) இருதயங்கள் மீது தாளிடப்பட்டு விட்டதா?" (47: 24) என அல்லாஹ் வினவுகிறான்.

திருக்குர்ஆனை விளங்கிக் கொள்வதையும் ஆராய்வதையும் பற்றிய விரிவான விளக்கம் பிறிதோரிடத்திற் தரப்பட்டிருப்பினும் நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய சில விதிகள் உண்டு.

1. புனித திருக்குர்ஆனின் வசனங்கள் ஒவ்வொன்றும் இன்றைய தினத்திலேயே அருளப்பட்டதாகக் கருதுங்கள். அவை அருளப்பட்ட காலத்துக்குப் போலவே இன்றைக்கும் பொருத்தமுடையவை என எண்ணிக் குர்ஆனை விளங்கிக் கொண்டு பின்பற்றுங்கள். இக்கண்ணோட்டத்தில் அதனை உங்கள் சொந்த வாழ்க்கை, செயல் துறைகள், அனுபவங்கள், அறிவு மட்டங்கள், தொழில் நுட்பம் என்பவற்றிலும் தொடர்புபடுத்த முயலுங்கள். திருக்குர்ஆனின் எந்தவொரு வசனத்தையும் காலங்கடந்ததாகக் கருத வேண்டாம்.

2. மொழி பெயர்ப்பின் உதவியோடு திருக்குர்ஆனை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை முழுமையாக வாசியுங்கள். அவ்வாறு செய்வது, அந்த நூலைப் பற்றியும் அதன் நடை பற்றியும் அதன் தூதைப் பற்றியும் ஒரு முழுமையான கருத்தை உங்களுக்குத் தரும்.

3. ஆரம்பத்தில் சுருக்கமான, ஆனால் திருத்தமான மொழி பெயர்ப்புக்களை வாசியுங்கள். நீளமான, விரிவான தப்ஸீர்களில் மூழ்க வேண்டாம்.

4. மொழிபெயர்ப்புக்களின் உதவியின்றித் திருக்குர்ஆனை விளங்கிக்கொள்ளத் தேவையான அளவுக்கு அரபு மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கற்க முயலுங்கள். இது ஒரு கடினமான செயலாகத் தோன்றலாம். ஆனால் தீவிரமாகவும் பக்தியோடும் அதில் ஈடுபட்ட ஓரளவு கல்வி கற்றவர்களுங் கூட ஒரு சில மாதங்களில் அதனைக் கற்றிருப்பதை நான் அறிவேன்.

5. நீங்கள் வாசிக்கும் பல்வேறு பகுதிகளை ஆழமாகச் சிந்தித்து ஆராயுங்கள். இதற்காக ஒரு குறிப்பிட்ட திருவசனத்தையோ பகுதியையோ மெதுவாக (தர்த்திலாக) அல்லது திரும்பத் திரும்ப ஓதுவது அவசியமாகும். நீங்கள் எந்த அளவுக்குச் சிந்தித்து ஆராய்கின்றீர்களோ அந்த அளவுக்கு அதன் வளமான எல்லையற்ற கருத்துக்களை அதிகமாகப் பெற்றுக்கொள்வீர்கள். இதனாலேயே இப்னு உமர் (ரலி) அவர்கள் 'ஸூரத்துல் பகராவை'க் கற்பதற்கே எட்டு ஆண்டுகளைக் கழித்துள்ளார். முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் மற்றும் பலரும் ஒரு திருவசனத்தைத் திரும்பத் திரும்ப ஓதுவதில் முழு இரவுகளைச் செலவிட்டுள்ளனர்.

## V. மனப்பூர்வமான ஈடுபாடு

திருக்குர்ஆன் முதன் முதலாக முஹம்மத் (ஸல்) அவர்களின் இதயத்தில் அல்லது அகத்தில் இறக்கப்பட்டது. எனவே, திருக்குர்ஆனை ஓதும்போது உங்கள் அகத்தின் பரிபூரண ஈடுபாடு செலுத்தப்பட்டால் மாத்திரமே அதன் முழுமையான பேரானந்தத்தை நீங்கள் அனுபவிக்கலாம். நீங்கள் வாசிப்பதை விளங்கி, கடைப்பிடித்து, அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அவனது திருவசனங்களையே ஓதுவதாக எண்ணிக்கொண்டால் அது ஒரு கடினமான பணியல்ல. அத்தகைய ஒரு ஈடுபாட்டைப் பிற வழிகளாலும் அடைந்து வலுப்படுத்திக் கொள்ளலாம்.

(1) திருக்குர்ஆனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்கள் பற்றியும், இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் பிறரும் திருக்குர்ஆனில் எத்தகைய ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் கூறப்பட்டுள்ள திருமறை வசனங்களை அடி நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். "அல்லாஹ்வைப் பற்றி கூறப்பெற்றால் அவர்களுடைய இதயங்கள் பயந்து நடுங்கி விடும்; அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப் பெற்றால் அவை அவர்களது விசுவாசத்தை மேலும் அதிகரிக்கும்" (8: 2) "எவர்கள் தங்கள் இறைவனுக்குப் பயப்படுகிறார்களோ (அவர்கள் அதனைக் கேட்ட மாத்திரத்தில்) அவர்களுடைய உரோமம் சிலிர்த்துவிடுகிறது. பின்னர் அவர்களுடைய தோலும் இருதயங்களும் அல்லாஹ்வுடைய எண்ணத்திலேயே இளகுகின்றன. (39:23) "(இவ்வேதம்) ஓதிக் காண்பிக்கப் பெற்றால் அவர்கள் (இதனை விசுவாசித்து) முகங்குப்புற விழுந்து சிரம்பணிகின்றனர். அன்றி அவர்கள் "எங்கள் இறைவன் மிகப் பரிசுத்தமானவன்; எங்கள் இறைவனின் வாக்குறுதி நிச்சயமாக நிறைவேறிவிட்டது" எனக் கூறுவார்கள். அன்றி அவர்கள் முகங்குப்புற விழுந்து அழுவார்கள்......... அவர்களுடைய உள்ளச்சமும் அதிகரிக்கும் (17: 107 - 109) "தவிர (இத்தகையோரிற் பலர் நம்முடைய) தூதர்மீது அருளப்பெற்றவைகளைச் செவியுற்றால், உண்மையை அவர்கள் உணர்வதன் காரணமாக அவர்களின் கண்கள் (தாரை தாரையாக) நீர் வடிப்பதைக் காண்பீர்கள். (அன்றி) "எங்கள் இறைவனே! (இவ்வேதத்தை) நாங்கள் விசுவாசித்தோம். ஆகவே, (இவ்வேதம் உண்மையானதெனச்) சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும் நீ பதிவுசெய்து கொள்வாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறுகின்றனர். (5: 83 - 84)

(2) குர்ஆன் அல்லாஹ்வினால் உங்களையே விழித்து அருளப்பட்டதாகவும் அது உங்கள் காலத்துக்கும் மிகவும் பொருத்தமானதெனவும் ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராகிவிட்டீர்கள். இனி அதன் ஒவ்வொரு திருவசனமும் உள்ளடக்கிய செய்தியானது தனிப்பட்ட முறையில் உங்களுக்காகவே அருளப்பட்டதென எண்ணிக்கொள்ளலாம். அத்திருவசனம் ஒரு விதியாகவோ, நெறியாகவோ இருக்கலாம். ஒரு கூற்றாகவோ அறிவுத் துணுக்காகவோ இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாம். ஒரு வாக்குறுதியாகவோ ஒரு எச்சரிக்கையாகவோ இருக்கலாம். ஒரு கட்டளையாகவோ அல்லது ஒரு தடை யுத்தரவாகவோ இருக்கலாம். எப்படியிருப்பினும் அது உங்களுக்காகவே அருளப்பட்டது என்று நம்பிக்கொள் ளுங்கள்.

(3) வெவ்வேறு திருவசனங்களிற் பொதிந்துள்ள குறிப் புக்களையும் போக்குகளையும் புரிந்துகொள்வதற்கு உங்கள் உள்ளம் உயிர்த் துடிப்புள்ளதாக இருக்கவேண்டும். அவற் றுக்கேற்ப உங்கள் இதயம், நேசித்தல், புகழ்தல், ஆவா, பிரமிப்பு, நம்பிக்கை, ஆச்சரியம், உறுதி, ஆவல், பாசம், அச்சம், மகிழ்ச்சி, துக்கம், பக்தி, கீழ்ப்படிவு ஆகிய உணர்வு களினூடாக ஊடுருவிச் செல்லவேண்டும்.

(4) உள்ளத்தின் மேற்படி நிலைமைகளுக் கேற்றவாறு உங்கள் நாவும் கருத்தை வெளியிட வேண்டும். அவ்வாறு கவே இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இரவுத் தொழுகைகளிற் குர்ஆனை ஓதிவந்தனர். அவர்கள் அல்லாஹ் வின் மகத்துவம் பற்றியும் புகழைப் பற்றியும் கூறும் திரு வசனங்களின் முடிவில் 'ஸுப்ஹானனல்லாஹ்' என்பார்கள். அல்லாஹ்வின் அருட் கொடைகளையும் கருணையையும் பற் றிய திருவசனங்களின் முடிவில் 'அல் ஹம்துலில்லாஹ்! என் பார்கள். அவர்கள் அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்பை யும் அடைக்கலத்தையும் வேண்டி அவனது தயாளத்தையும் பேரருளையும் கேட்டு, அதற்கேற்ற திருவசனங்களின் பின் இறைஞ்சுவார்கள்.

(5) உள்ளத்தின் ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாகக் கண்கள் கண்ணீரைச் சொரிதல் வேண்டும். இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் அன்னாரின் உத்தமத் தோழர் களும் புனித திருக்குர்ஆனில் லயிக்கும் சந்தர்ப்பங்களிற் கண்ணீர் வடிப்பார்கள். குர்ஆன் உங்கள் மீது சுமத்தி யுள்ள பொறுப்புக்களையும் உங்களுக்கு வழங்கும் எச்சரிக் கைகளையும் எண்ணிப் பார்த்தால் நீங்களும் கண்ணீர் வடிப்பதைத் தவிர்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI. குர்ஆனைப் பின்பற்றி வாழ்தல்

அல்லாஹுத் தஆலாவுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் உங்கள் வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ள வழிகாட்டுவதே புனித திருக்குர்ஆனின் முழுமையான நோக்கமாகும். அதனை ஓதும் நீங்கள் அதன் அழைப்புக்குச் செவி மடுத்து வாழ முயலுங்கள். அது உங்கள் கிரியைகளில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாவிட்டால் அல்லது அதன் ஏவல் விலக்கல்களை நீங்கள் கடைப்பிடிக்காவிட்டால் நீங்கள் குர்ஆனை எவ்வகையிலும் நெருங்கியவர்களாக மாட்டீர்கள். உண்மையிலே, திருக்குர்ஆனை ஓதுபவர் அதன்படி செயற்படாவிட்டால் அவரே இறைவனால் கூடுதலாகத் தண்டிக்கப்படக் கூடும். இறைதூதர் (ஸல்) கூறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதாவது: "எனது உம்மத்துக்களில் அதிகமான நயவஞ்சகர்கள் (திருக்குர்ஆனை) ஓதியவர்களில் உள்ளனர்" (அஹ்மத்). "திருக்குர்ஆன் ஹறாமாக்கியவற்றை ஹலாலாக்கிக் கொண்டவன் திருக்குர்ஆனை நம்பியவனல்லன்" (திர்மிதி). உதுமான், அப்துல்லா இப்னு மஸ்ஊத் போன்ற நாயகத் தோழர்கள் ரசூல் (ஸல்) அவர்களிடம் பத்துத் திருவசனங்களைக் கேட்டறிந்த பின் அவற்றை—கருத்துத் தெளிவுடனும், செயலிலும்—முற்றாகக் 'கற்றுக்கொள்ளாமல்' அப்பால் நகரவும் மாட்டார்கள். இவ்வாறாக அவர்கள் ஒரு ஸூறாவைக் கற்பதிலேயே பல ஆண்டுகளைச் செலவிட்டுள்ளனர்.

நீங்கள் குர்ஆனின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் அந்தரங்க சுத்தியோடும் திடசங்கற்பத்தோடும் முயல்வீர்களாயின் அல்லாஹ் நிச்சயமாக உதவி புரிந்து உங்கள் பாதையை இலகுவாக்கித் தருவான்.

## VII. திருக்குர்ஆனை ஓதல்

திருக்குர்ஆனை ஓதல் சம்பந்தமாக நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய மேலதிக விதிகள் சில பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) திருக்குர்ஆனைத் தினசரி ஓதி வாருங்கள். அதாவது திருக்குர்ஆனை ஓதாத நாளை ஒரு பூரணமான நாளாகக் கருதாதீர்கள். இடைக்கிடை நீண்ட பந்திகளை ஓதுவதை விட ஒரு சிறிய பந்தியையாவது தினமும் ஓதிவருவது சாலச் சிறந்தது.

(2) உங்களால் இயன்றளவுக்குத் திருக்குர்ஆனை மனனம் செய்யுங்கள். நீங்கள் சிறிய ஸூறுக்களில் ஆரம்பித்துப் படிப்படியாக குறுகிய பந்திகளையும் பின்னர் நீளமான பந்திகளையும் மனனம் செய்யலாம்.

(3) தொழுகைகளில் உங்களால் இயன்ற அளவுக்குத் திருக்குர்ஆனை ஓதி வாருங்கள். விசேடமாக இரவு வேளையில் இஷாவுக்குப் பின்னரும் ஸுப்ஹுக்கு முன்னரும், ஸுப்ஹு வேளையிலும் குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். ஏனெனில் குர்ஆன் எங்களை வசீகரிக்கவும் அதில் நீங்கள் மெய் மறப்பதை உறுதிப்படுத்தவும் இராப் பொழுதையும் காலை வேளையையும் விடச் சிறப்பான நேரங்கள் இல்லையெனலாம்.

(4) திருக் குர்ஆனை இனிமையான குரலில் ஓதுவீர்களாக. "உங்களின் குரல்களால் திருக்குர்ஆனை அழகுபடுத்துங்கள்" எனக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனை இனிமையாக ஓதுபவரின் குரலே அல்லாஹ்வின் மீதான அச்சத்தைப் பிரதிபலிக்குமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

(5) போதியளவு கவனமும் விளக்கமும் இன்றி அவசரமாகத் திருக்குர்ஆனை ஓத வேண்டாம். ஒரு கிழமைக்குக் குறைந்த காலத்துக்குள் திருக்குர்ஆனை ஓதி முடிக்க வேண்டாமென இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மூன்று நாட்களுக்குள் ஓதி முடிப்பவர்கள் அதிலிருந்து எதனையும் விளங்கிக்கொள்ள மாட்டார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. 'அல் - பகரு', 'ஆல - இம்ரான்' போன்ற நீண்ட ஸூறுக்களை அவசரமாக ஓதி முடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலும் பார்க்க 'அல் - காரிஆ' போன்ற குறுகிய ஸூறாக்களைக் கருத்துத் தெளிவுடன் ஓதுவதையே தாம் விரும்புவதாக ஒரு நாயகத் தோழர் கூறியுள்ளார்.

## VIII. இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை

அல்லாஹ்விடத்திலிருந்து திருக்குர்ஆன் முதன்முதலாக அருளப்பெற்ற இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை இயன்றளவுக்கு நெருங்குவதன் மூலமே திருக்குர்ஆனை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். அவர்களுடைய முழு வாழ்க்கையும் 'வாழும் குர்ஆனாகும்.' திருக்குர்ஆனைச் செயல்ரீதியாக 'வாசிக்க' விரும்பினால் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் செயல்களை அவதானிக்கவேண்டும். இதனையே அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் 'அவர்களின் பண்பு குர்ஆனாகவே இருந்தது' என்று கூறியுள்ளார்கள். இறை தூதர் (ஸல்) அவர்களை நெருங்கவேண்டுமாயின் இயன்றளவுக்கு அவர்களின் நல்லுபதேசங்களையும் (ஹதீஸ்களை) வாழ்க்கை முறையையும் (ஸீறா) வாசிக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

இறுதியாக, திருக்குர்ஆனை எவ்வாறாக ஓதவேண்டுமோ அவ்வாறே ஓதும் ஆற்றலை எமக்குத் தருமாறும் அல்லாஹ் தனது புனித திருமறையில் பின்வருமாறு வர்ணித்தவர்களில் நின்றும் எம்மை ஆக்காதிருக்கவும் அவனிடம் பிரார்த்திப்போமாக. "இவர்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களைப் போல் இவர்களும் ஆகிவிட வேண்டாம். அவர்கள் மீதும் ஒரு காலம் சென்ற பின் அவர்களுடைய இருதயங்கள் கல்லாய்ச் சமைந்துவிட்டன. (57: 16) "தவ்ருத் (என்னும் வேதத்)தைச் சுமந்துகொண்டு, அதிலுள்ள பிரகாரம் நடக்காதவர்களின் உதாரணம் புத்தகங்களைச் சுமக்கும் கழுதையின் உதாரணத்தை ஒத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(62: 5) "என் இறைவனே! நிச்சயமாக என்னுடைய ஜனங்கள் இந்தக் குர்ஆனை முற்றிலும் வெறுத்து(த் தள்ளி)விட்டனர்" (25: 30)

எமது இறைவா! திருக்குர்ஆனின் கருத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை எமக்கருளி, எம்மை நேர்வழியில் வழி நடத்திச் செல்வாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை தூதர் (ஸல்) உவந்த திருமறை ஓதல்கள்

இறை தூதர் (ஸல்) அவர்கள் தொழுகையில் அடிக்கடி ஓதிவந்ததையும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஓதியவையும், விசேடமாக குறிப்பிட்டவையுமான சில ஸூறுககள் உண்டு. அவற்றையும் நீங்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

பஜ்ருடைய வேளையில் அவர்கள் கஃப் (50) ஐயும் அதையொத்த ஏனைய ஸூறுக்களையும் ஓதுவார்கள் (முஸ்லிம்). அவர்கள் அல்-தக்வீரையும் ஓதுவார்கள் (81) (முஸ்லிம்). வெள்ளிக்கிழமை காலையில் அவர்கள் அல்-ஸஜ்தா (32) வையும் அல்-தஹ்ர் (76) ஐயும் ஓத விரும்பினார்கள். (புகாரி, முஸ்லிம்). சில வேளைகளில் அவர்கள் அல்-பலக் (113), அல்-நாஸ் (114)போன்ற குறுகிய ஸூறுக்களையும் ஓதுவார்கள் (அபூ-தாவூத்). அல்லது அல்-காபிரீன் (109) ஸூறாவையோ அல்-இக்லாஸ (112)யோ (முஸ்லிம்) அல்லது அல்-பகராவின் 136 ஆவது திருவசனத்தையோ அல்லது ஆல-இம்ரானின் 64ஆவது திருவசனங்களையோ (முஸ்லிம்) ஓதுவார்கள். கடைசியாகக் குறிப்பிட்ட இரண்டு திருவசனங்களையும் அவர்கள் பஜ்ருடைய சுன்னத்திலும் ஓதுவார்கள் (நவவி). ளுஹருடைய வக்தில் அவர்கள் அல்-அஃலா (87) அல்-லைல் (92) என்பவற்றை ஓதியதாக அறிவிக்கப்பட்டுள்ளது (முஸ்லிம்). வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் மஃரிப் தொழுகையின்போது அல்-தூர் (52) (புகாரி, முஸ்லிம்) அல்-முர்ஸலாத் (77) (புகாரி, முஸ்லிம்), அல்-துகான் (44) (நஸாயீ), ஆகிய ஸூறுக்களை ஓதியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இஷா த் தொழுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-தின் (95) (புகாரி, முஸ்லிம்) ஸூறாவை ஓதினார்கள். ஒரு தடவை 'முஆத்' என்பவரிடத்தில் இஷாத் தொழுகையில் அல் - அஃலா, அல் - லைல் (92) அல் - லுஹா முதலிய ஸூறாக்களை ஓதுமாறு கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்). வெள்ளிக்கிழமைகளிலும் பெருநாள் தொழுகைகளிலும் அவர்கள் அல் - அஃலா, அல் - ஹாஷிய்யா (88) (முஸ்லிம்) அல்லது அல் – ஜுமுஆ (62) வையும் அல் - முனாபிகீனையும் (63) (முஸ்லிம்) அல்-கஃபையும் அல்-கமரையும் (54) (முஸ்லிம்) ஓதினார்கள்.

வெவ்வேறான ஹதீஸ்களின்படி நித்திரைக்குச் செல்ல முன்பதாக வழமையாகவோ அல்லது இடைக்கிடையோ அவர்கள் அல் - பகறாவின் 285, 286 ஆவது திருவசனங்களையும் 255ஆவது திருவசனத்தையும் (புகாரி, முஸ்லிம்), அல் - இக்லாஸையும், அல் - பலக்கையும், அல்-நாஸையும், அல் - காபிரீனையும் (நஸாயீ) அல் - ஸஜ்தாவையும் (முஸ்லிம்) அல் - முல்கையும் (நஸாயீ) தஸ்பீஹில் ஆரம்பிக்கும் ஸூறாக்களையும் (நஸாயீ) ஹாமீமில் ஆரம்பிக்கும் ஸூறாக்களையும் (திர்மிதி) அல் - இஸ்ரா (17), அல்-ஸுமர் (39) ஐயும் (திர்மிதி) ஓதி வந்துள்ளார்கள். அவர்கள் தஹஜ்ஜத் தொழுகைக்காக விழித்தெழுந்த வேளைகளில் பெரும்பாலும் ஆல - இம்ரான் ஸூறாவின் கடைசிப் பதினொரு திருவசனங்களையும் ஓதுவார்கள்.

புனித குர்ஆனின் சில ஸூறாக்களின் மகோன்னத இயல்புகள்பற்றி வேறு ஹதீஸ்கள் உண்டு. ஸூறா அல்-பாத்திஹா திருக்குர்ஆனில் அதி மேன்மையானது. (புகாரி, முஸ்லிம்) ஸூறா அல் - பகறாவும் ஆல–இம்ரானும் அவற்றை ஓதுபவர்களுக்காக மன்றாடும் (முஸ்லிம்). அல் - பகறா ஓதப்படும் வீட்டிலிருந்து சைத்தான் வெருண்டோடுவான் (முஸ்லிம்). ஆயத்துல்–குர்ஸீ திருக்குர்ஆனின் உன்னத திருவசனங்களாகும் (முஸ்லிம்). அல்-பாத்திஹாவும் அல்-பக்கறாவின் கடைசித் திருவசனங்களும் இரு ஒளிச் சுடர்களாகும்.

அவை போன்றவை வேறெந்தத் தூதுவர்களுக்கும் அருளப் படவில்லை (முஸ்லிம்). இரவு வேளையில் ஸூறா அல்-பகறா வின் கடைசித் திருவசனங்கள் இரண்டையும் ஓதுபவன் அவனுடைய தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுவான் (புகாரி, முஸ்லிம்). அல்-கஹ்பின் பத்துத் திருவசனங்களைப் பற்றிக்கொள்பவன் தஜ்ஜாலிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்வான் (முஸ்லிம்). அல் - ஸில்ஸால் குர்ஆனின் பாதி யாகும்; அல் - இஃலாஸ் குர்ஆனின் மூன்றிலொன்றாகும். அல் - காபிரீன் குர்ஆனின் கால் வாசியாகும். (திர்மிதீ, புகாரி, முஸ்லிம்). அல் - முல்க் அதனை ஓதுபவர்களுக்காக அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் வரையில் தொடர்ந்து மன்றாடும். யாஸீன் குர்ஆனின் இதயமாகும் (திர்மிதி). அல்-பலக், அந்-நாஸ் போன்ற வேறு ஸூறாக்கள் ஒருபோதும் இறக்கப்படவில்லை. (முஸ்லிம்)

திருக்குர்ஆனின் ஒரு பகுதி மற்றதிலும் பார்க்க உயர் வானதெனக் காட்டுவதற்காக இந்த ஹதீஸ்கள் கூறப்பட வில்லை. ஆனால் புனித திருக்குர்ஆனின் சில பகுதிகளை மனனம்செய்வதற்கும் ஓதுவதற்கும் அவை மேலதிக தூண்டு கோலாக அமைகின்றன. இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்தில் திருக்குர்ஆனை ஒருதடவை யாவது முற்றாக ஓதி முடிப்பார்கள். மேலும் அவர்கள் தஹஜ்ஜத் தொழுகையில் குர்ஆனின் நீண்ட பகுதிகளை ஓதுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஆ

اَللّٰهُمَّ ارْزُقْنِيْ التَّفَكُّرَ وَالتَّدَبُّرَ بِمَا يَتْلُوْهُ
لِسَانِيْ مِنْ كِتَابِكَ وَالْفَهْمَ لَهُ، وَالْمَعْرِفَةَ
بِمَعَانِيْهِ وَالنَّظَرَ فِيْ عَجَائِبِهِ وَالْعَمَلَ بِذٰلِكَ
مَا بَقِيْتُ، اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ.

அல்குர்ஆனை ஓதி, பொருள் விளங்கி. அதன் வழியில் வாழத் தனக்கு உதவி புரியுமாறு அல்லாஹ்விடம், உமர் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் செய்த பிரார்த்தனையே மேலே தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆனும் ஸுன்னாவும்

மனிதர்களின் நேர்வழிக்காக அருளப்பட்ட அல்குர்ஆன், மனித வாழ்வின் பல்வேறு துறைகளையும் சார்ந்த பிரச்சினைகளுக்கு வழிகாட்டியாகும்.

மக்களை சகல வழிகேடுகளிலிருந்தும் விடுவித்து அல்லாஹ்வின் ஒளியின் பால் இட்டுச் செல்வதும் அவர்களுக்கு ஈருலக விமோசனங்களையும் பெற்றுக் கொடுப்பதும் அதன் இலட்சியமாகும்.

அல்குர்ஆனை அருளிய அல்லாஹு தஆலா அதனை மக்களுக்கு செயல்படுத்திக் காட்டும் பணிக்காக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தேர்ந்தெடுத்தான்.

எனவே,

- ❋ அல்குர்ஆனை அன்னார் ஓதியவாறே நாமும் ஓத வேண்டும்.
- ❋ அதனை அன்னார் விளங்கியவாறே நாமும் விளங்க வேண்டும்.
- ❋ அதனை அன்னார் வழிகாட்டியாகக் கொண்டவாறே நாமும் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும்.
- ❋ அன்னாரைப் போன்றே குர்ஆனின் அழைப்புக்கு நாம் சாட்சியாளர்களாக அமைந்து அதன் தஃவாவை விருத்தி செய்ய வேண்டும்.

— இலங்கை ஜமாஅதே இஸ்லாமி

PRINTED AT I. P. C. PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org